**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.36/2024**

**நாள் : 29.01.2026**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பாலாஜி | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.லோகநாதன் | வயது | : | 22 |
| ஊர் | : | நாயணத்தியூர் | தொழில் | : | டெக்னிசியன் |
| வட்டம் | : | நாட்றம்பள்ளி | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1
2. P.S.V மருத்துவமனையின் ரசீது நகல் – ம.சா.ஆ.2
3. 04.03.2023 ம் தேதியிட்ட P.S.V மருத்துவமனையின் X–Ray நகல் – ம.சா.ஆ.3
4. 30.05.2023 ம் தேதியிட்ட P.S.V மருத்துவமனையின் X–Ray நகல் – ம.சா.ஆ.4
5. 25.08.2023 ம் தேதியிட்ட P.S.V மருத்துவமனையின் X–Ray நகல் – ம.சா.ஆ.5
6. 05.09.2023 ம் தேதியிட்ட P.S.V மருத்துவமனையின் X–Ray நகல் – ம.சா.ஆ.6

7. 02.04.2023 தேதியிட்ட C.T Scan Report ( Brain) –ம.சா.ஆ.7

8. P.S.V மருத்துவமனையின் மருத்துவ விடுப்பு அறிக்கை – ம.சா.ஆ.8

9. P.S.V மருத்துவமனை அறிக்கை – ம.சா.ஆ.9

10. மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.10

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து இரவு நேரத்தில் நடந்தது என்றால் சரிதான். அப்போது 8 மணி இருக்கும். விபத்து நடந்த ரோடு தனி ரோடாகும். நான்கு ரோடு எதுவும் சந்திக்கவில்லை. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் பயணித்தேனா என்றால் இல்லை, எனது இருசக்கர வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு எனது நண்பர் ஜெகதீசனிடம் பேசிக்கொண்டிருந்தேன். நான் நின்றுக்கொண்டிருந்த திசைக்கு நேர் திசையில் அதாவது எனக்கு பின்னால் வந்துதான் பூபதி என்பவர் இருசக்கர வாகனத்தை கொண்டு என்மீது மோதினார். வெலக்கல்நத்தம்–திருப்பத்தூர் ரோட்டில் அன்னசாகரம் என்ற இடத்தில் ரோட்டின் வலதுபுறத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தேன். எனக்கு மதுப்பழக்கம் இல்லை. விபத்து நடந்த இடத்தில் மின்விளக்கு இல்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் வெளிச்சமும் இல்லை என்றால் சரிதான்.

என்னுடைய வலது கால் பாதத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டது. விபத்து நடந்த உடனே நான் மயக்கமாகிவிட்டேன். விபத்தினால் எனது நண்பருக்கு எந்த காயம் ஏற்படவில்லை. விபத்திற்கு பின்னிட்டு புதுப்பேட்டை அரசு மருத்துவமனையில் அட்மிட் ஆனேன். எந்த வாகனத்தில் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று ஞாபகமில்லை. பர்கூர், கந்திகுப்பத்தில் உள்ள பி எஸ் வி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். புதுப்பேட்டை அரசு மருத்துவமனையில் எலும்பு முறிவு காரணமாக மேல் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளவேண்டும் என்று கூறியதால்தான் நான் தனியார் மருத்துவமனைக்கு போனேன்.

புதுப்பேட்டை அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சை மேற்கொள்ளுமாறு பரிந்துரை எழுதி கொடுத்தார்களா என்றால் ஆமாம். அதனை ஒரு பேப்பரில் எழுதி கொடுத்தார்கள். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புதுப்பேட்டையில் உள்ளது ஆரம்ப சுகாதார நிலையம் என்றால் சரிதான். ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து நான் நேரடியாக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்குத்தான் வந்திருக்கவேண்டும் என்றால் எலும்பு முறிவாக இருந்ததால்தான் தனியார் மருத்துவமனைக்கு போனேன்.

நான் சொல்வதுபோல் விபத்து நடந்திருந்தால் அதுபற்றி விபத்து பதிவேடு பதிவு செய்திருக்கக்கூடும் என்றும், அவ்வாறு இல்லாததால்தான் விபத்து

பதிவேடு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மதுபோதையில் அஜாக்கிரதையாக சாலையை கடந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரிடம் இழப்பீடு பெறும் நோக்கில் நேரடியாக காவல் நிலையம் சென்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் விபத்தினால் ஏற்பட்டது அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.